**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS.209/2023

பெயர் : சொக்கலிங்கம் (PW2) (Cross)

த/க/பெ. :

தேதி :17.07.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சிவன் கோவில் தெரு நாட்டாண்மை பஞ்சாயத்தார் மீது ரேவதி தாக்கல் செய்துள்ளார். பிரச்சனை செய்து கொண்டு இருப்பதாக வழக்கு போட்டுள்ளார். வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாது. விஸ்தீரணம் சரியாக தெரியாது. தாவா சொத்து திருவாரூர் மாவட்டத்தில் திருக்கண்ணபுரம் கிராமத்தில் உள்ள அருள் மிகு சௌரிராஜபெருமாள் ஆலயத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். வாதி குடும்பவத்தில் எந்த வருடத்தில் பாக பிரிவினை ஏற்பட்டது என்பது தெரியாது. யார் யார் பாகம் பிரித்துக கொண்டார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது பாங்காளிகள் பிரித்துக் கொண்டார்கள். யார் யாருக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கபட்டது என்பது தெரியாது. இடும்பதுரைக்கு எவ்வளவு சொத்த ஒதுக்கப்பட்டதுஎன்பது தெரியாது. இடும்பதுரை குடும்பத்தார் திருக்கோவிலுக்கு கட்டளை செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். கட்டளை செலுத்துவதற்கும் தாவா சொத்திற்கும் சம பந்தம் இல்லை என்றால்சரியல்ல. இடும்பதுரை எந்த ஆண்டு இறந்தார் என்பது தெரியாது. அவரின் வாரிசுகள் காளிதாஸ், வேல்முருகன், பக்கிரிசாமி வாரிசுகள். அனைவரும் உயிரோடு தான் இருக்கிறார்கள். இடும்பதுரையின் மற்ற வாரிசுகள் உயிருடன் இருக்கும் போது வாதியின் கணவர் மட்டும் சொத்தை அனுபவித்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இடும்பதுரைக்கு குடும்ப பாகம் பிரிவினையில் 16 செண்ட் மட்டும் தான் ஒதுக்கபட்டது என்றால் தெரியாது. குளத்திற்கு தெற்கே உள்ளது என்றால் இருக்கலாம். குளம் பல காலங்களாக அங்கேயே உள்ளது என்றால் சரிதான். பிள்ளையளார் கோவிலும் பல ஆண்டுகளாக உள்ளது என்றால் சரிதான். வாதிதான் குளத்தை வெட்டியதாகவும், கோவிலை கட்டியதாகவும் சொல்வது தவறு என்றால் சரிதான். குளம் பல காலம் சிவன் கோவில் தெருவில் உள்ளவர்களின் பொது பயன் பாட்டில் உள்ளது என்றால் சரிதான் எல்லோரும் புழங்குவார்கள். அதனால் குளம் மற்றும் கோவிலில் வாதி உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா வழக்கு

சொத்தில் வாதி வேலி வைத்ததை பிரதிவாதிகள் தடுத்து சுமார் 3, 4 மாதங்கள் இருக்கும். இந்த வழக்கு தாக்கல் செய்ய வாதிக்கு உரிமை இல்லை என்றால் மருமகள் என்பதால் தாக்கல் செய்துள்ளார். நான் இடும்பதுரையின் மகளை திருமணம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். அதனால் வாதி என் உறவினர் மைத்துனர் மனைவி என்றால் சரிதான் . வாதி என் உறவினர் என்பதால் நடக்காத சம்பவத்தை குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.